## இயல் 7.1 - எண்ணியல்

பயிற்சி எண் :: 7.1.6.5.C

எண்ணியல் - மேற்சிந்தனைக் கணக்குகள் - தநாஅபு பயிற்சி 1.5 - 11-15

## எண்ணியல் - மேற்சிந்தனைக் கணக்குகள் - தநாஅபு பயிற்சி 1.5 - 11-15

11. பிரபுவின் வீட்டிலிருந்து யோகா நிலையத்திற்கு உள்ள தூரம் 102 மீ மற்றும் யோகா நிலையத்திலிருந்து பள்ளிக்குத் தூரம் 165 மீ எனில், அவன் பயணம் செய்யும் மொத்தத் தூரத்தினைக் கிலோ மீட்டரில் காண்க (தசம எண் வடிவம்).

பிரபுவின் வீட்டிலிருந்து யோகா நிலையத்திற்கு உள்ள தூரம் = 102 மீ

யோகா நிலையத்தில் இருந்து பள்ளிக்கு உள்ள தூரம் = 165 மீ

∴ பிரபு பயணம் செய்யும் மொத்தத் தூரம் = 102 + 165 = 267 மீ

267 மீ - ஐக் கி.மீ ஆக மாற்ற 1000 - ஆல் வகுக்க வேண்டும்.

$$267 \text{ மீ} = \frac{267}{1000} = \frac{267.}{1000} = 0.267 \text{ கி.மீ}$$

∴ பிரபு பயணம் செய்த மொத்த தூரம் (கி.மீ.-ல்) **0.267** ஆகும்.

12. அன்பு மற்றும் மாலா இருவரும் $A$ இலிருந்து $C$ இக்கு இருவேறு பாதைகளில் பயணிக்கிறார்கள். அன்பு $A$ என்ற இடத்திலிருந்து $B$ என்ற இடத்திற்கும் அங்கிருந்து $C$ என்ற இடத்திற்கும் பயணம் செய்கிறார். $B$ இலிருந்து $A$ ஆனது 8.3 கி.மீ மற்றும் $C$ இலிருந்து $B$ ஆனது 15.6 கி.மீ உள்ளது. மாலா $A$ என்ற இடத்திலிருந்து $D$ என்ற இடத்திற்கும் அங்கிருந்து $C$ என்ற இடத்திற்கு பயணம் செய்கிறார். $A$ இலிருந்து $D$ இன் தொலைவு 7.5 கி.மீ மற்றும் $D$ இலிருந்து $C$ இன் தொலைவு 16.9 கி.மீ எனில், யார் பயணம் செய்த தொலைவு அதிகம் மற்றும் எவ்வளவு அதிக தூரம் அவர் பயணம் செய்தார்?




அன்பு பயணம் செய்த மொத்தத் தொலைவு ① = 8.3 கி.மீ ($A \to B$) + 15.6 கி.மீ ($B \to C$)

= 23.9 கி.மீ ($A \to C$)

① 8.3 + 15.6 = 23.9

மாலா பயணம் செய்த மொத்தத் தொலைவு ② = 7.5 கி.மீ ($A \to D$) + 16.9 கி.மீ ($D \to C$)

= 24.4 கி.மீ ($A \to C$)

② 7.5 + 16.9 = 24.4

24.4 கி.மீ **>** 23.9 கி.மீ

∴ மாலா அதிக தூரம் பயணம் செய்துள்ளார்.

மாலா, அன்புவை விட அதிகம் பயணம் செய்த தொலைவு ③ = 24.4 கி.மீ - 23.9 கி.மீ

= 0.5 கி.மீ

③ 24.4 - 23.9 = 00.5

∴ மாலா அன்பை விட அதிக தூரம் பயணம் செய்துள்ளார்.

அவர் **0.5 கி.மீ** தூரம் அன்பை விட அதிகம் பயணம் செய்துள்ளார்.

13. ரமேஷ் ஒரு வாடகை வண்டியில் பயணம் செய்ய ஒரு மணி நேரத்திற்கு ₹97.75 செலுத்துகிறார் எனில், ஒரு வாரத்தில் 35 மணி நேரம் பயணம் செய்கிறார் எனில், ஒரு வாரத்திற்கு அவர் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை எவ்வளவு?

ரமேஷ் வாடகை வண்டியில் பயணம் செய்ய ஒரு மணி நேரத்திற்கு செலுத்திய தொகை = ₹97.75

∴ 35 மணி நேரம் பயணம் செய்ய செலுத்த வேண்டிய மொத்தத் தொகை = $97.75 \times 35$

= ₹3421.25

```
    9 7.7 5
×       3 5
-----------
  4 8 8 7 5
2 9 3 2 5
-----------
3 4 2 1.2 5
```

∴ ரமேஷ் ஒரு வாரத்தில் 35 மணி நேரம் பயணம் செய்தால் அவர் செலுத்த வேண்டியத் தொகை **₹3421.25** ஆகும்.

14. ஒரு வானூர்தி 6 மணி நேரத்தில் பயணித்த தொலைவு 2781.20 கி.மீ எனில், அதன் சராசரி வேகத்தைக் காண்க.

வானூர்தி 6 மணி நேரத்தில் பயணித்த தொலைவு = 2781.20 கி.மீ

வானூர்தியின் சராசரி வேகம் என்பது அது ஒரு மணி நேரத்தில் பயணித்த தொலைவு ஆகும்.

∴ வானூர்தி ஒரு மணி நேரத்தில் பயணித்த தொலைவு $= \frac{2781.20}{6}$

= 463.533 கி.மீ/மணி

```
     463.53
6 ) 2781.20
    24
     38
     36
      21
      18
       3.2
       3.0
        20
        18
         2
```

∴ வானூர்தியின் சராசரி வேகம் **463.533 கி.மீ/மணி** ஆகும்.

15. குமாரின் மகிழுந்து ஒரு லிட்டருக்கு 12.6 கி.மீ தருகிறது. அவனது எரிபொருள் கலனில் 25.8 லி எரிபொருள் கொள்ளும் எனில், அவனால் எவ்வளவு தூரத்தைக் கடக்க இயலும்?

குமாரின் மகிழுந்து ஒரு லிட்டர் எரிபொருளில் கடக்கும் தொலைவு = 12.6 கி.மீ

குமாரின் மகிழுந்தின் எரிபொருள் கலனின் கொள்ளளவு = 25.8 லி

∴ 25.8 லி எரிபொருளில் அவரால் கடக்க முடிந்தத் தொலைவு = $25.8 \times 12.6$ = 325.08 கி.மீ

```
      2 5.8
×     1 2.6
-----------
    1 5 4 8
    5 1 6
2 5 8
-----------
3 2 5.0 8
```

∴ குமாரின் மகிழுந்தில் 25.8 லி எரிபொருளில் **325.08 கி.மீ** கடக்க இயலும்.

## இதன் காணொளியின் YouTube இணையதள இணைப்பு (YouTube URL)

https://youtu.be/i5TA19eTGVM


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Monday 31st October, 2022 :: 06:40 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.

https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**